# உன் கையில் உன் வாழ்க்கை...

**அ.ஜெறின் வெண்ணிலா**
**யாழ் பல்கலைக் கழகம்**

பட்டப்படிப்பு முடித்த இளைஞர் யுவதிகள் எப்படியாவது ஒரு வேலையில் சேர்ந்து விட வேண்டும். அதுவும் ஒரு அரசாங்க வேலையாகவே இருக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்க்கின்றனர்.

அப்படி இந்த அரசாங்கவேலையில் என்னதான் இருக்கிறது? மாதாந்தம் சரியாக சம்பளம் கிடைக்கும். அதிக சீதனத்துடன் பெண் கிடைக்கும். சாதிப்பிரச்சனை குறையவும் வாய்ப்பிருக்கிறது. ஓய்வூதியம் கிடைக்கும். இதனாலோ என்னவோ ஆண்கள், பெண்கள் எல்லோருமே அரசாங்க வேலையே வேண்டும் என்ற எண்ணத்தில் தேடி, ஓடி அலைகின்றனர். இவர்கள் அரசாங்க வேலையை மட்டும் நம்பி என்த பயனும் இல்லை என்று தெரிந்திரிந்தாலும் ஏதோ ஒரு நம்பிக்கையில் முயற்சித்துக் கொண்டே இருக்கின்றனர்.

வாழ்க்கை நம் கையில் உள்ளது. எந்த வேலையை செய்தால் என்ன?, “செய்யும் தொழிலே தெய்வம்” நேர்மையோடு செய்யும் எந்தத் தொழிலாலும் செய்பவனுக்கு சிறப்புத்தானே. நமக்கென ஒரு வேலை கிடைக்குமென எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் நாமே ஒரு வேலையை உருவாக்கி செய்யும் போது நிச்சயம் அதற்குரிய பலன் கிடைக்கும். ஏட்டுக் கல்வியை விட அனுபவக்கல்வியில் அதிகம் சம்பாதிக்கும் இளைஞர்களும் எமது சமூகத்தில் காணப்படுகின்றனர். நான் படித்தவன்/ள் என்ற எண்ணத்தில் வேலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் எந்தப் பலனும் இல்லை.

இது இவ்வாறு இருக்க, தற்போது அரசாங்க வேலைகள் எல்லாமே படித்த படிப்பிற்கு சம்பந்தமற்றதாகவே இருப்பதும் இன்னுமொரு பிரச்சினை.

வைத்தியத்துறை, பொறியியல் துறை, முகாமைத்தவத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கே அவர்களின் கல்விக்கு ஏற்ற வேலை வாய்ப்பு காணப்படுகின்றது. கலைப்பீடத்தில் கல்வி கற்று வெளியேறும் இளைஞர்களில் 90 வீதமானவர்கள் பொருத்தமற்ற அரசாங்க வேலைகளிலேயே கடமையாறறுகின்றனர் என யாழ்ப்பாண மாவட்ட செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவிக்கின்றார். கடைசியாக தமக்கு வந்துள்ள 6000 விண்ணப்பங்களில் 4000ற்கும் அதிகமான விண்ணப்பங்கள் பெண்களினாலேயே விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வேலைக்கு செல்வதில் பெண்களே அதிக அக்கறை காட்டுகின்றனர். ஆண்கள் வெளிநாடு செல்வதில்

அக்கறையாக உள்ளனர். படித்து முடித்ததும் இளைஞர்கள், யுவதிகள் அரசாங்க வேலையே வேண்டுமென எதிர்பார்ப்பதற்குரிய காரணிகளாக நிரந்தரமானவேலை, ஓய்வூதியம், வேறும் சலுகைகள் போன்ற விடயங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. "அரசாங்கம் ஒரு பட்டதாரியை உருவாக்கக் காரணம் அவர்கள் படித்து முடித்ததும் தமக்கென ஒரு எதிர்காலத்தை அமைத்துக் கொள்வார்கள் என்ற எண்ணத்திலேயே. ஆனால் அவர்கள் படித்து முடித்ததும் திரும்பவும் அரசாங்கத்தையே எதிர்பார்த்து நிக்கின்றனர்" என்கிற அவரது கருத்து இதில் கவனிக்கப்பட வேண்டியது.

வேலையை எதிர்பார்த்து நிற்கும் ஆண்கள், பெண்களின் மனநிலையில் வித்தியாசமாக இருபாலாரும் வெவ்வேறு எண்ணப்பாங்கில் இவ் அரச வேலையை எதிர்பார்க்கின்றனர் என்பது மற்றுமொரு விடயம்.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்து வெளியேறி வேலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பட்டதாரியான வி.ஸ்ரீறஞ்சினி "பெண்கள் தனியார் வேலைக்கு துணிந்து செல்ல முடியாது. பாதுகாப்பு என்பது அங்கு பெண்களுக்கில்லை. அத்துடன் பிரசவ காலங்களில் அரசதுறைகளில் காணப்படும் சலுகைகளுக்கும் தனியார் துறைகளில் காணப்படும் சலுகைகளுக்கும் வேறுபாடு உண்டு. அந்த வகையில் அரசாங்க வேலையே பெண்களுக்கு நன்மையானது. ஒரு பெண்ணிற்கு ஓய்வூதியம் கடைசிவரை இடைக்க வாய்ப்புண்டு. எனவே எதிர்காலத்தை நோக்கிய எண்ணப்பாங்கிலேயே நாம் நாம் அரச வேலையை எதிர்பார்க்கின்றோம் ஒட்டு மொத்தத்தில் அசர துறையே பெண்களுக்குப் பாதுகாப்பான துறை" என்கிறார்.

இவ்வாறான காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும் இளைஞர்களின் இம் மனநிலைக்கான காரணம் வேலை வழங்கும் நிறுவனங்களின் பற்றாக்குறையும் வேலை வாய்ப்பு பெறுவது தொடர்பான சரியான விளக்கமின்மையுமே காரணமாகும். எனவே வேலை வாய்ப்புப்பெறுவது தொடர்பான விளக்கங்கள் சமூகத்தில் பரப்பப்படும் பொழுது வேலையை நோக்கிய பயணம் ஆரம்பமாகும் என்பது திண்ணமாகும்.

***அப்போது வேலை இல்லாப் பட்டதாரிகள் என்ற மறைசிந்தனையை எண்ணிக்கொண்டுள்ள இளைஞர்களின் நிலை வேலை தேடும் பட்டதாரிகள் என்ற நேர்சிந்தனையுடன் புதிய தடம் ஒன்று உருவாகலாம்.***

நன்றி - விசைச்சிறகுகள்